# இலங்கையின் கடன் மீட்சிக்கு முழுமையான ஆதரவு ஜனாதிபதி ரணிலுக்கு சீனாவின் நிதியமைச்சர் உறுதி!



இலங்கையின் கடன் மீட்சிக்காக இரு தரப்பினருக்கும் உகந்த இடைக் கால மற்றும் நீண்ட கால வேலைத்திட்டத்திற்கு முழுமையான ஆதரவை வழங்குவோம், என்று சீன நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சீனாவிற்கு நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் சீன நிதி அமைச்சருக்கும் இடையிலான இருதரப்பு பேச்சுவார்த்தை இன்று காலை பீஜிங்கில் இடம்பெற்றது.

இதன்போது, இலங்கையின் கடன் மீட்சிக்காக இரு தரப்பினருக்கும் பொருத்தமான இடைக்கால மற்றும் நீண்ட கால வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சீனா முழுமையான ஆதரவை வழங்கும் என சீன நிதி அமைச்சர் லியு குன் தெரிவித்தார்.

இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார சவாலை சீனா நன்கு புரிந்து கொண்டுள்ளதாக தெரிவித்த சீன நிதியமைச்சர், நெருக்கடியைச் சமாளிக்க இதுவரை இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகளின் முன்னேற்றத்தையும் வரவேற்றார்.

2 ►

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 02 | வியாழக்கிழமை | 19.10.2023 | கதிர் 96

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்



## ஐ.எம்.எப். மரணப் பொறியைத் தோற்கடிப்போம் ரணில் - மோடியின் திருட்டு ஒப்பந்தம் வேண்டாம்

### யாழ்ப்பாணத்தில் இன்று கையெழுத்துப் போராட்டம்

மக்கள் போராட்ட இயக்கத்தின் ஏற்பாட்டில் கையெழுத்துப் போராட்டம் ஒன்று இன்று முன்னெடுக்கப்பட்டது.

இன்று காலை 10 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய பேரூந்து நிலையத்துக்கு முன்னால் இந்தக் கையெழுத்துப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

"ஐ.எம்.எப். மரணப் பொறியைத் தோற்கடிப்போம்", "ரணில் - மோடி திருட்டு ஒப்பந்தம் வேண்டாம்" எனும் தொனிப்பொருளில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (அ)

## விஜயகலா மகேஸ்வரன் வழக்கிலிருந்து விடுதலை!



பிணையில் விடுவிக்கப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனை சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில், விடுதலை செய்யுமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு புலிகள் இயக்கத்தை மீள ஸ்தாபிக்க வேண்டும், என அவர் தெரிவித்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பிலான வழக்கிலிருந்து முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனுக்கு இதற்கு முன்னர் பிணை வழங்கப்பட்டிருந்தது.

இன்று, கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ் முன்னிலையில் வழக்கு முன்னெடுக்கப்பட்ட போது இந்த விடுதலை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு ஆடி மாதம் 2 ஆம் திகதி யாழப்பாணம் வீரசிங்க மண்டபத்தில் 2 ►

## கோட்டாபயவின் அறையில் மீட்கப்பட்ட பணத்திற்கு சாட்சியம் இல்லை – இலஞ்சம், ஊழல் ஆணைக்குழு



இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் உத்தியோகபூர்வ அறையில் மீட்கப்பட்ட 17.85 மில்லியன் பணம் தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் அறிவித்துள்ளது.

சாட்சியங்கள் இல்லாத காரணத்தினால் இந்த முடிவை எடுத்துள்ளதாகவும், எனவே இது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது, எனவும் இலஞ்சம், ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் ஜூலை 9 ஆம் திகதி அரசாங்கத்திற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஜனாதிபதி மாளிகை போராட்டக்காரர்களால் முற்றுகையிடப்பட்ட போது குறித்த பணம் கண்டுபிடிக்கப்பட்டது.

அன்றைய தினமே குறித்த பணம் ஆர்ப்பாட்டக்காரர்களால் கோட்டை பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டு, மூன்று வாரங்களின் பின்னர் கோட்டை நீதவான் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டது. 2 ►

## நிமலராஜனின் நினைவேந்தல் நிகழ்வு



யாழ்ப்பாணத்தில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 23ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ். ஊடக அமையத்தில் இன்று அனுஷ்டிக்கப்பட்டது.

(விரிவான செய்தி 6 ஆம் பக்கத்தில்)

## உள்ளூராட்சித் தேர்தலுக்கு வேட்பு மனு தாக்கல் செய்த அரச ஊழியர்களுக்கு

### அதே இடங்களிலேயே மீண்டும் பணி!

உள்ளூராட்சித் தேர்தலுக்கு வேட்பாளராகப் பரிந்துரைக்கப்பட்ட அனைத்து அரச ஊழியர்களும் வேட்புமனுவைக் கொடுப்பதற்கு முன்னர் அவர்கள் இருந்த அலுவலகங்களில் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள், என பிரதமர் தினேஷ் குணவர்தன இன்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த பிரதமர் தினேஷ் குணவர்தன, தேர்தலுக்கு வேட்பு மனுக்களைச் சமர்ப்பித்த அரசாங்க ஊழியர்களுக்கு நீதி வழங்க தாம் முடிவு செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (04)

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# பொலிஸ் மா அதிபரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உண்டு!

## சபாநாயகர் மன்றில் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 19

பொலிஸ் மா அதிபர் ஒருவரை ஜனாதிபதியே நியமிக்க வேண்டும். இதற்குரிய அதிகாரம் அரசியலமைப்புச் சபைக்குக் கிடையாது!, என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

தற்போதைய பொலிஸ் மா அதிபரின் பணிக்காலம் முடிவடைந்த பின்னரும், அந்தப் பதவிக்கு இன்னுமொருவர் நியமிக்கப்படாத விடயம் குறித்து, ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்றில் இன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அரசியலமைப்புச் சபையினால் பொலிஸ் மா அதிபரின் பெயரை அங்கீகரிக்க மட்டும் தான் முடியும். ஆனால், அவரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடம்தான் உள்ளது. ஜனாதிபதியின் இந்த அதிகாரத்தை அரசியலமைப்பினாலோ, அரசியலமைப்புச் சபையினாலோ கேள்விக்குட்படுத்தவியலாது.

எனினும், ஜனாதிபதி நியமிக்கும் ஒருவரை அங்கீகாரிப்பதற்கோ அங்கீகரிக்காமல் விடுவதற்கோ அரசியலமைப்புச் சபைக்கு முழு அதிகாரம் உள்ளது, என்றும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன சுட்டிக்காட்டியுள்ளார். (04)

## சமுர்த்திப் பயனாளியின் வீடு புனரமைப்புச் செய்து திறப்பு



(எம்.எப்.நவாஸ்)

ஜயவிமன வீட்டுத் திட்டத்தின்கீழ், அட்டாளைச்சேனை 12ஆம் பிரிவில் சமுர்த்திப் பயனாளி ஒருவரின் வீட்டைப் புனரமைப்புச் செய்து திறந்து வைக்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமது ஷாபீர் தலைமையில் இன்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நிர்வாக உத்தியோகத்தர் கே.பி. சலீம், தலைமை முகாமையாளர் ஏ.எம். ஹமீத், முகாமையாளர்களான ரீ.பரமானந்தம், ஐ.யூ. நபீஷா, கிராம உத்தியோகத்தர் எம்.ஐ.எம். அஸ்வர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஜே.எம்.அனிஸ் மற்றும் ஏ.எஸ்.எம். உனைஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## பள்ளத்தில் கவிழ்ந்து பஸ் விபத்து ஒருவர் உயிரிழப்பு- 18 பேர் காயம்

நாரம்மல, தம்பலஸ்ஸ பிரதேசத்தில் பஸ் ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 18 பேர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அலவ்வயில் இருந்து நாரம்மலை நோக்கிப் பயணித்த பஸ்ஸே விபத்துக்குள்ளாகியுள்ளது.

காயமடைந்த 7 பேர் குருநாகல் வைத்தியசாலையிலும், 11 பேர் நாரம்மல வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் 51 வயதான நபரே உயிரிழந்ததுடன் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

## நுகேகொடையில் பேருந்து விபத்து!

நுகேகொடை கம்சபா சந்தியில் பேருந்து ஒன்றும் ஜீப் வண்டியொன்றும் மோதியதில் ஏற்பட்ட விபத்தில் பலர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஹோமாகமவில் இருந்து கோட்டை நோக்கிப் பயணித்த பேருந்து ஒன்று மற்றுமொரு பேருந்தை முந்திச் செல்ல முற்பட்டபோது முன்னால் வந்த ஜீப் வண்டியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து இடம்பெற்ற பேருந்தின் சாரதி, நடத்துநர் இருவரும் சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும், போக்குவரத்து சமிக்ஞை விளக்கை மீறிப் பேருந்தை ஓட்டுநர் செலுத்தியுள்ளதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (04)

## கோட்டாபயவின் அறையில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வாறாயினும், பணத்தைக் கையளிப்பதில் பொலிஸாரின் தாமதம் குறித்து விசாரணை நடத்துமாறு கோட்டை நீதவான் திலின கமகே, பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டார்.

கோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரி ஏன் இந்த விடயத்தை தாமதப்படுத்தினார் என்பதில் சந்தேகம் உள்ளது என்றும் கோட்டை நீதவான் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

## விஜயகலா மகேஸ்வரன் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற ஜனாதிபதியின் மக்கள் சேவைத் திட்டத்தின் எட்டாவது நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரங்களுக்கான அப்போதைய இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இனங்களுக்கிடையே முரண்பாட்டை ஏற்படுத்தும் வகையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்கள் அச்சமின்றி சுதந்திரமாக வாழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீண்டும் எழ வேண்டும் என சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டாரெனவும், அக்கருத்தானது அரசியலமைப்பின் 6ஆவது பிரிவின் திருத்தம், 1978 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் தண்டணைச் சட்டக்கோவை 120 ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றமாகும் எனவும் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பகுப்பாய்வு மற்றும் தடுப்புப் பிரிவு கொழும்பு பிரதான நீதவான் நீதி நீதிமன்றில் முதல் அறிக்கை தாக்கல் செய்திருந்தது.

இச்சம்பவம் தொடர்பாக ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் சார்பில் ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி தவராசா தனது சமர்ப்பணத்தில், விஜயகலா மகேஸ்வரன் ஜனாதிபதியின் மக்கள் சேவைத் திட்டத்தின் எட்டாவது நிகழ்ச்சியில் அரச அமைச்சர்கள் பலர் கலந்து கொண்ட நிகழ்வில் உரையாற்றுகையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர்ச்சியாகப் பெண்கள் மீது பிரயோகிக்கப்பட்ட வன்முறைகள் குறித்து அச்சத்தையும் ஆத்திரத்தையும் உணர்ச்சி மேலிடக் குறிப்பிட்டுப் பேசினார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆட்சிக் காலத்தில் இதுபோன்ற துஷ்பிரயோகங்கள் இடம்பெறவில்லை. அப்படி நடைபெற்றால் அதற்கான தண்டனைகள் பாரதூரமாக இருந்தன. நாட்டின் சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்பட வேண்டுமாயின் அத்தகைய நிர்வாகம் ஒன்றினை தற்போது நாம் ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படையிலேயே அவரது கருத்து அமைந்திருந்ததேயன்றி நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இனங்களுக்கிடையே முரண்பாட்டை ஏற்படுத்தும் வகையில் உரையாற்றவில்லை என்று செய்த சமர்ப்பணத்தையடுத்து 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி விஜயகலா மகேஸ்வரனை ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் நீதிமன்றம் பிணையில் விடுதலை செய்திருந்தது .

இன்று வழக்கு நீதிமன்றில் மேலதிக விசாரணைக்காக அழைக்கப்பட்ட போது குற்றப்புலனாய்வுப் பகுப்பாய்வு மற்றும் தடுப்புப்பிரிவுப் பொலிசார், நீதிமன்றில் தமது சமர்ப்பணத்தில் 1978ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் தண்டனைச் சட்டக்கோவை 120ஆம் பிரிவின் கீழ் விஜயகலா மகேஸ்வரனுக்கு எதிராக குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்ய உத்தேசிக்கவில்லையென சட்டமா அதிபர் திணைக்களம் தங்களுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாக பொலிசார் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்பித்தனர்.

இதயடுத்து விஜயகலா மகேஸ்வரன் சார்பில் ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி தவராசா தனது கட்சிக்காரரை விடுதலை செய்யுமாறு நீதிமன்றினை கேட்டுக் கொண்டதையடுத்து முன்னாள் ராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.

சட்டத்தரணி தர்மஜா தர்மராஜாவின் அனுசரனையில் சிரேஷ்ட சட்டத்தரணி காமினி திசாநாயக்க, ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா ஆகியோர் இவ்வழக்கில் ஆஜராகியிருந்தனர். (04)

## இலங்கையின் கடன் மீட்சிக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் அபிவிருத்திக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு சீனா தொடர்ந்து பூரண ஆதரவை வழங்கும் எனவும் சீன நிதி அமைச்சர் உறுதியளித்தார்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான பணப் பரிமாற்றம் தொடர்பாக நீண்டகாலமாக கருத்தாடல் இடம்பெற்றதாகவும், சீனாவுடன் நெருக்கமாகச் செயற்படும் ஏனைய சர்வதேச நிறுவனங்களும் இலங்கைக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுவதாகவும் சீன நிதி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதன்போது, பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான சவாலான பணியில் இலங்கைக்கு சீனாவின் தொடர்ச்சியான ஆதரவை மிகவும் பாராட்டுவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார மீட்சியை ஏற்படுத்துவதற்கும் இலங்கையில் போட்டித்தன்மை வாய்ந்த டிஜிட்டல் மற்றும் பசுமைப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்குமான வேலைத்திட்டம் தொடர்பாகவும் இதன்போது விளக்கமளிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, தேசியப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் சண்ட்ரா பெரேரா ஆகியோரும் உடனிருந்தனர்.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இன்று சீன தொலைத் தொடர்பாடல் நிர்மாணக் கூட்டுத்தாபனம், சினோபெக் நிறுவனம், பி.வை.டி நிறுவனம் உள்ளிட்ட சீனாவின் உயர்மட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலருடனும் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் எதிர்கால முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டதாகவும், துறைமுக நகரத்தை சர்வதேச நிதி மத்தியஸ்தானமாக மாற்றியமைத்தல், துறைமுக நகரத்திற்கான புதிய சட்டதிட்டங்களை உருவாக்குதல், துறைமுக நகரத்திற்காக மட்டுப்படுத்தப்பட்ட நீதிமன்ற மற்றும் வழிகாட்டல் முறைமைகளை உருவாக்குதல் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டதெனவும்,

அதேபோல் இலங்கையின் போக்குவரத்துக் கட்டமைப்பை மின்சாரத்தின் ஊடாக இயக்குதல், மின் வாகனப் பாகங்களை ஒழுங்கமைத்தல், மின்சார ரயில் சேவைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டதெனவும் அத்தகவல்கள் குறிப்பிட்டுள்ளன. (04)


## விற்பனையாளர் தேவை

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்

# ஐ.ம.ச.வின் பொத்துவில் தேர்தல் தொகுதிக்கான இணை அமைப்பாளராக வினோகாந்த் நியமனம்



(வி.ரி. சகாதேவராஜா)

ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் தொகுதி இணை அமைப்பாளராக புதிய வளத்தாப்பிட்டியைச் சேர்ந்த கட்சி முக்கியஸ்தர் வெள்ளையன் வினோகாந்த் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசா நேற்று முன் தினம் வழங்கி வைத்தார்.

பொத்துவில் தொகுதியில் உள்ள திருக்கோவில் ஆலையடிவேம்பு காரைதீவு ஆகிய தமிழ்ப் பிரதேச செயலகங்களின் ஒட்டுமொத்த கட்சியின் பணிக்காக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏலவே அமைப்பாளர் வெள்ளையன் வினோகாந்த், கட்சியின் அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேசங்களுக்கான அமைப்பாளராகவும், எதிர்க்கட்சித் தலைவரின் சிங்கள - தமிழ் மொழி பெயர்ப்பாளராகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# சம்புக்களப்பு - கோணாவத்தை ஆற்றை துப்புரவு செய்வதற்கு 2 மில்லியன் நிதி

(கே.எ.ஹமீட்)

அட்டாளைச்சேனை சம்புக்களப்பு, கோணாவத்தை ஆற்றினை துப்புரவு செய்வதற்கு முதற்கட்டமாக நீர்ப்பாசன அமைச்சர் ரொஸான் றணசிங்க அவர்களின் பணிப்புரையின்படி நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் அஜீத் 2 மில்லியன் நிதியை வழங்கியுள்ளார்.

அண்மையில் நீர்ப்பாசன திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அஜீத்தை கிழக்கு மாகாண முன்னாள் வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசன அமைச்சரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தேசிய அமைப்பாளருமான எம்.எஸ்.உதுமாலெப்பை சந்தித்தார்.

இந்நிகழ்வில் அக்கறைப்பற்று நீர்ப்பாசன பொறியியலாளர் ஆகில் அகமட்டும் கலந்து கொண்டார்.

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நூற்றாண்டு விழா சிறப்புச்சேர்த்த மாணவர்களுக்குப் பாராட்டு நிகழ்வு



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இடம்பெற்ற நூற்றாண்டு நிறைவு விழாவில் கலாசாலையின் முன்னோடிகளாகக் கொள்ளப்படும் சேர் பொன்னம்பலம் இராமநாதன், காரைநகர் அருணாசலம் உபாத்தியாயர், கோப்பாய் சுவாமிநாதன், அதிபர் பொன்னையா போன்ற பதினெட்டுப் பெருந்தகைகளது வேடங்களைத் தாங்கிக் கலந்து சிறப்பித்த நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வை, கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் 98-99 அணியினர் இன்று காலை முன்னெடுத்திருந்தனர்.

பாடசாலை அதிபர் சாந்தினி வாகீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவபாலன் குணபாலன் கலந்து சிறப்பித்தார். ஆசிரிய கலாசாலை அதிபர் ச.லலீசன், பிரதி அதிபர் க.செந்தில்குமரன், ஒட்டிசுட்டான் மகாவித்தியாலய அதிபர் சி. நாகேந்திரராஜா மற்றும் கலாசாலைச் சமூகத்தினர் பலர் இந்நிகழ்வில் கலந்து, கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய சமூகத்தினரைப் பாராட்டினர்.

# உணவு மற்றும் பாரம்பரியத்தின் மூலம் கலாசாரங்களை எவ்வாறு இணைத்தல்

## உரையாடலும் சர்வதேச உணவு தினமும்

கிளிநொச்சி அறிவியல் நகரில் உள்ள யாழ் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் ஏற்பாட்டில் உணவு மற்றும் பாரம்பரியத்தின் மூலம் கலாசாரங்களை எவ்வாறு இணைத்தல் என்பது தொடர்பான உரையாடலும் சர்வதேச உணவு தின நிகழ்வும் விவசாய பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.வசந்தரூபா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.ஸ்ரீ சற்குணராஜா, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் டொக்டர் ஜே.எம்.எஸ்.பி. ஜெயசுந்தர, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கே.கஜபதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் பீடாதிபதி ஏந்திரி கே. பிரபாகரன் மற்றும் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகஈ யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டார்கள். (02)



# காஸாவில் மனிதாபிமான நிவாரண உதவிகள் ஜோபைடன் கோரிக்கைக்கு இஸ்ரேல் இசைவு



போரால் கடந்த சில நாள்களாக முற்றிலும் முடக்கப்பட்டுள்ள காஸா முனையில் மனிதாபிமான உதவிகள் அளிக்க இஸ்ரேல் அனுமதி அளித்துள்ளது.

இஸ்ரேலியர்களுக்கு ஆதரவு தெரிவிக்க அந்நாட்டுக்குச் சென்ற அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கேட்டுக் கொண்டதன் பேரில் இந்த அனுமதியை அளிப்பதாக இஸ்ரேல் புதன்கிழமை தெரிவித்தது.

காஸாவில் குடிநீர், உணவு, மருந்துப் பொருள்கள், மின்சாரம் இல்லாமல் மக்கள் கடும் அவதிப்பட்டு வருகின்றனர். முஸ்லிம் நாடுகள் அனுப்பிய மனிதாபிமான அவசர நிவாரணப் பொருள்கள் அடங்கிய 300 பாரவூர்திகளை எகிப்து எல்லையில் கடந்த சில நாள்களாக இஸ்ரேல் தடுத்து நிறுத்தி உள்ளது.

இந்நிலையில், 'உணவு, குடிநீர், மருந்துப் பொருள்கள் மட்டும் காஸாவுக்குள் ராஃபா எல்லை வழியாக எகிப்திலிருந்து அனுமதிக்கப்படும்' என்று இஸ்ரேல் அதிபர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவலகம் நேற்று அறிவித்தது. ஆனால், இதற்கான திகதியை இஸ்ரேல் குறிப்பிடவில்லை.

முன்னதாக, பைடன் வருகைக்கு முன்பு செவ்வாய்க்கிழமை இரவு காஸாவில் கிறிஸ் தவ சேவை மையத்தால் நடத்தப்படும் மருத்துவமனை மீது இஸ்ரேல் குண்டு வீசித் தாக்குதல் நடத்தியதில் சுமார் 500 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவம் உலகம் முழுவதும் பெரும் அதிர்வலைகளை எழுப்பியது.

இதற்குக் கண்டனம் தெரிவித்து, அமெரிக்க அதிபர் பைடனுடனான சந்திப்பை பாலஸ்தீனம், ஜோர்டான், எகிப்து நாடுகளின் அதிபர்கள் புதன்கிழமை ரத்துச் செய்தனர். இஸ்ரேல்- ஹமாஸ் இடையிலான போர் இஸ்லாமிய நாடுகளுக்கு விரிவடைவதைத் தடுக்க பைடன் பேச்சுவார்த்தை நடத்த திட்டமிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

காஸா மருத்துவமனை மீதான தாக்குதலுக்கு இஸ்ரேலும், ஹமாஸ் அமைப்பும் பரஸ்பரம் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருகின்றன. காஸாவிலிருந்து வீசப்பட்ட ரொக்கெட்டே தவறுதலாக அருகே உள்ள மருத்துவமனை மீது விழுந்தது என்று இஸ்ரேல் குற்றஞ்சாட்டியது.

பாலஸ்தீனத்தின் ஆயுதக் குழுவான இஸ்லாமிய ஜிஹாத் இந்த ரொக்கெட்டை ஏவியதாகவும், இதற்கான ஆதாரம் உள்ளதாகவும் இஸ்ரேலிய ராணுவச் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். ஆயினும், இந்தக் குற்றச்சாட்டை இஸ்லாமிய ஜிஹாத் மறுத்துள்ளது. அந்த மருத்துவமனையை உடனடியாக மூட எச்சரித்து அங்கு இஸ்ரேல் முன்பும் தாக்குதல் நடத்தி உள்ளமையே இதற்கு ஆதாரமாகும் என்றும் அது தெரிவித்துள்ளது.

மருத்துவமனை மீதான தாக்குதல் இஸ்ரேலின் கொடூரமான படுகொலை என்று ஹமாஸ் தெரிவித்துள்ளது. இஸ்ரேலைக் கண்டித்து ஆக்கிரமிப்பு மேற்குக் கரை, எகிப்து, லெபனான், ஜோர்டான், ஈரான் உள்ளிட்ட நாடுகளில் பெரும் போராட்டங்கள் நடைபெற்றன.

இதனிடையே, காஸா மீதான தாக்குலுக்காக இஸ்ரேலைப் பழிவாங்கப்போவதாக ஈரான் அதிபர் இப்ராஹீம் ரெய்ஸி தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலை இஸ்ரேல் நடத்தவில்லை என்று இஸ்ரேல் அதிபர் பெஞ்சமின் நெதன்யாகுவைச் சந்தித்த பிறகு பைடன் தெரிவித்தார்.

இதுகுறித்து பைடன் கூறுகையில்,

'போர் நிலவரம், பாதுகாப்பு உதவிகள், மனிதாபிமான தேவைகள், காணாமல்போன அமெரிக்கர்கள் குறித்து நெதன்யாகுவிடம் கடினமான கேள்விகளை எழுப்பினேன். இந்த மோதல் பெரிதாக விடமாட்டேன்.

இஸ்ரேலும், பாலஸ்தீன மக்களும் அமைதியாகவும், பாதுகாப்பாகவும் வாழ இரு தனி நாடுகள் அமைப்பதுதான் தீர்வாக அமையும் என்பது எனது கருத்து. தற்போதைய மோதல்கள் இதை இன்னும் வலுவாக்குகின்றன. அண்டை நாடுகளுடன் ஒருங்கிணைந்து செல்ல இஸ்ரேலுடன் அமெரிக்கா தொடர்ந்து பணியாற்றும்.

காஸா, மேற்குக் கரைக்கு 100 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான மனிதாபிமான நிவாரண உதவிகள் அளிக்கப்படும், என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

காஸாவில் தடுத்து நிறுத்தப்பட்டுள்ள மனிதாபிமான உதவிகளை அளிக்க நடவடிக்கை கோரி ஐ.நா. பாதுகாப்புச் சபையில் பிரேஸில் கொண்டுவந்த தீர்மானத்தை அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி தோல்வியடையச் செய்தது. 12 நாடுகள் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தன. ரஷ்யா, பிரிட்டன் ஆகியன வெளிநடப்புச் செய்தன. (04)

## ஜோ பைடன் - பெஞ்சமின் நெதன்யாகு இஸ்ரேலில் நேரில் சந்தித்துப் பேசினர்



இஸ்ரேல் சென்றுள்ள அமெரிக்க அதிபர் ஜோ பைடன், அந்நாட்டுப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை நேரில் சந்தித்துப் பேசிய பிறகு இரு தலைவர்களும் கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

இஸ்ரேல் - காஸா இடையேயான போர் 12 ஆவது நாளாகத் தீவிரமடைந்துள்ள நிலையில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் இஸ்ரேல் சென்றடைந்தார். விமான நிலையத்தில் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு நேரில் வந்து அதிபரை வரவேற்றார்.

இரு தலைவர்களும் செய்தியாளர்களைக் கூட்டாகச் சந்தித்தனர். அப்போது பேசிய ஜோ பைடன், உலகமே பார்த்துக்கொண்டிருக்கிறது. அமெரிக்கா மற்றும் பிற ஜனநாயக நாடுகளைப் போலவே இஸ்ரேலுக்கும் ஒரு மதிப்பு உள்ளது. மேலும் நாங்கள் என்ன செய்யப் போகிறோம் என்பதை இஸ்ரேல் தரப்பிலும் பார்க்கிறார்கள், என்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கூறினார்.

காஸா பகுதியில் இருந்த மருத்துவமனை மீது நேற்று தாக்குதல் நடத்தப்பட்டது குறித்து மிகவும் வருத்தமும் அதிருப்தியும் அடைந்தேன். ஆனால், அதுதொடர்பான விடியோக்களைப் பார்க்கும்போது, காஸா மருத்துவமனை மீதான தாக்குதலில் பிற அமைப்புகளுக்கு தொடர்பு இருக்கலாம் என்று தெரிகிறது. பிற குழுவினர் செய்தது போல தெரிகிறது. விசாரணை நடைபெற்று வருகிறது, என்றும் பைடன் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் - காஸா இடையே போர் நடந்து வரும் மிகவும் இக்கட்டாக சூழலில், இஸ்ரேலுக்கு வந்து தங்களது ஆதரவை தெரிவித்திருப்பதற்கு ஜோ பைடனுக்கு, பெஞ்சமின் நெதன்யாகு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

தொடர்ந்து பேசிய நெதன்யாகு, நாகரிக சக்திகளுக்கும் காட்டுமிராண்டித்தனத்தின் சக்திகளுக்கும் இடையிலான போர் என்று இதனை விவரித்தார். இஸ்ரேலின் பின்னால் அணிதிரளுமாறு இதர நாடுகளுக்கும் அவர் அழைப்பு விடுத்தார். (04)



## விமான நிலையத் தரையில் படுத்த ஜெர்மனி பிரதமர்

ஹமாஸுடனான போரில் இஸ்ரேலுக்குத் தனது ஆதரவைத் தெரிவிப்பதற்காக அந்த நாட்டுக்குச் சென்றிருந்த ஜெர்மனி பிரதமர் ஒலாஃப் ஷால்ஸ், ஏவுகணைத் தாக்குதலில் இருந்து தப்புவதற்காக விமான நிலையத் தரையில் படுக்கவைக்கப்பட்டார்.

செவ்வாய்க்கிழமை இரவு அவர் நாடு திரும்புவதற்காக விமானத்தில் ஏறியபோது இஸ்ரேலுக்குள் ஹமாஸ் அமைப்பினர் ஏவுகணைத் தாக்குதலை நடத்தியதாகக் கூறப்படுகிறது. அதையடுத்து விமான நிலையத்துக்கு அருகே எச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்டது.

உடனே விமானத்திலிருந்து ஷால்ஸையும், அவருடன் வந்திருந்தவர்களையும் பாதுகாப்பாக வெளியேற்றிய பாதுகாலர்கள், பாதுகாப்புக்காக அவரைத் தரையில் படுக்கச் செய்தனர். சில நிமிடங்களுக்குப் பிறகு அவர் விமானத்தில் ஏறி ஜெர்மனி புறப்பட்டார், என்று இஸ்ரேல் செய்திகள் தெரிவிக்கின்றன. (04)

## ஜெர்மனி தலைநகர் பெர்லினில் யூத தேவாலயம் மீது தாக்குதல்!

ஜெர்மனி தலைநகர் பெர்லினில் உள்ள யூத தேவாலயமொன்றில் நேற்று பெட்ரோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

காஸாவில் இஸ்ரேல் விமானத் தாக்குதல் நடத்தி வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து பெர்லினில் செவ்வாய்க்கிழமை இரவு நடைபெற்ற போராட்டத்தில் ஏற்பட்ட கலவரத்தின்போது பொலிஸாருக்கும், முஸ்லிம் அகதிகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. அதன் தொடர்ச்சியாக, அந்த நகரின் மத்தியில் அமைந்துள்ள யூத தேவாலயத்தில் இரு பெட்ரோல் குண்டுகள் நேற்று அதிகாலை வீசப்பட்டன.

இது குறித்து அந்தப் பகுதி யூத அமைப்பினர் கூறுகையில், அடையாளம் தெரியாத இருவர் வழிபாட்டுத் தலத்தில் பெட்ரோல் குண்டுகளை வீசியதாகத் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு ஜெர்மனி பிரதமர் ஒலாஃப் ஷால்ஸ் கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

இஸ்ரேல் - ஹமாஸ் போர் தொடங்கியதற்குப் பிறகு ஜெர்மனியில் யூதர்களுக்கு எதிரான தாக்குதல்கள் அதிகரித்து வருவதைப் பொறுத்துக்கொள்ள முடியாது, என்று அவர் எச்சரித்திருக்கிறார். (04)



# முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் 3ஆவது தேசிய மாநாடு காத்தான்குடியில்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

ஆற்றலுள்ள பெண்களின் அமைப்பான ஶ்ரீலங்கா பென் கிளப்பின் முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் மூன்றாவது தேசிய மாநாடு - 2023 சனிக்கிழமை காலை 10.30 க்கு "குடும்பம் எங்கள் விழி ஆற்றல் எங்கள் வழி" தொனிப் பொருளில் காத்தான்குடி சீஜஜி மண்டபத்தில் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

ஶ்ரீலங்கா பென் கிளப்பின் ஸ்தாபகத் தலைவி சம்மாந்துறை மஷ்ஹூறா தலைமையில் இடம்பெறும் இவ்விழாவில், இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து அறுபது பெண் எழுத்தாளர்கள் கலந்துகொள்கின்றனர்.

இந்நிகழ்வில், சிறப்பு விருந்தினராக ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக் கழக சிரேஷ்ட பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ்வும் முதன்மை விருந்தினர்களாக பேராதனை வளாக மெய்யியல்துறை ஓய்வுநிலைத் தலைவரும் பேராசிரியருமான எம்.எஸ்.எம்.அனஸ் மற்றும் காத்தான்குடி நகரசபை செயலாளர் றிப்கா ஷபீன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

மட்டக்களப்பு மத்தி வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம். அமீர், காரைதீவு கோட்டக்கல்விக் பணிப்பாளர் பைந்தமிழ்க்குமாரன் ஜே. டேவிட், மட்டக்களப்பு உதவி கல்விக் பணிப்பாளர் முருகு தயானந்தன், தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட நூலகரும் எஸ்.எல்.பி.சி யின் போஷகருமான கலாநிதி மஸ்ரூபா முகம்மது மஜீத், அம்பாறை மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரும் எஸ்.எல்.பி.சி யின் போஷகருமான ஏ.எல் தௌபீக், விடிவெள்ளி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எம்.பி.எம். பைரூஸ், ஒலி, ஒளி சிரேஷ்ட ஊடகவியலாளர் பா ஹாஷிம் ப அலவி அஷ்ஷேக் இர்பான் மௌலானா, மின்னல் வெளியிட்டகப் பணிப்பாளர் நாவலாசிரியரும் எஸ்.எல்.பி.சி.யின் போஷகருமான கவிஞர் அஸீஸ் எம். பாரிஸ், இஸ்லாமிய இலக்கியக் கழகத் தலைவர் முன்னாள் நகர சபை உறுப்பினர் கவிமணி ரீ.எல். ஜவ்பர் கான், அவதானி மீடியாவின் பணிப்பாளர் கவிஞர் மதியன்பன் மஜீத் ஆகியோர் நிகழ்வில் கௌரவ அதிதிகளாகவும் கல்முனை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரும் எஸ்.எல்.பி.சி.யின் போஷகருமான ஏ.எம்.தௌபீக் மற்றும் எம்.எச். பௌசுல் ஹிபானா காத்தான்குடி பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உதவியாளர் பி. சிந்து உஷா, காத்தானகுடி பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ஏ.எம்.நளீம் (நளீமி), ஊடகவியலாளரும் பல்துறைகலைஞருமான கலைச்சுடர் எம்.எஸ்.எம். ஸாகிர், கல்முனை பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெனிதா பிரதீபன் ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்துகொள்ளவுள்ளனர்.

மூன்று அமர்வுகளாக நடைபெறும் இவ்விழாவில், முதல் அமர்வு பெண்களுக்கு மட்டுமானதாக திட்டமிடப்பட்டுள்ளது.

இரண்டாம் அமர்வில் இருபத்திரெண்டு முஸ்லிம் பெண்களின் ஆங்கில மொழிபெயர்ப்புக் கவிதைகள் அடங்கிய "இமயம் தழுவும் இறக்கைகள்" கவிதைத் தொகுதி வெளியிட்டு வைக்கப்படவுள்ளதுடன் கவிதை, சிறுகதை மற்றும் ரமழான் மாதப் போட்டிகளில் வெற்றியீட்டியோர்களுக்கான பரிசளிப்பும் நடைபெறவுள்ளது.

மூன்றாவது அமர்வில் ஸ்ரீலங்கா பென் கிளப்பின் சிறந்த நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களும் நெறியாளர்களும் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இப்பெரும் விழாவில், கல்விமான்கள், கலைஞர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# வணிகத்துறை ஆசிரியருக்கு பிரியாவிடை நிகழ்வு



அக்கரைப்பற்று தேசிய பாடசாலையில் கடந்த ஆறு வருடங்களாக சேவையாற்றி கல்முனை ஸாஹிறா கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் வணிகத்துறை ஆசிரியர் ஏ.அப்துல் அஸீஸின் சேவையினைப் பாராட்டி, சேவை நலன் பாராட்டு மற்றும் பிரியாவிடை நிகழ்வு என்பன இன்று அக்கரைப்பற்று தேசிய பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

அதிபர் ஏ.எச். பௌஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது, ஆசிரியர் அஸீஸிற்கு நினைவுப் பரிசு வழங்கப்படுவதையும் அருகில் பிரதி அதிபர்களான எம்.இக்பால், எஸ்.எம்.எம்.ஜாபீர் உள்ளிட்ட ஆசிரியர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம் : எம்.ஏ.றமீஸ்)




# இறக்காமம் சமுர்த்தி வங்கியினால் சேமிப்பு, கணக்குத் திறக்கும் நிகழ்வு



(நூருல் ஹுதா உமர்)

வறுமை ஒழிப்பு வாரத்தினை முன்னிட்டு இறக்காமம் சமுர்த்தி வங்கியினால் சேமிப்பு மற்றும் கணக்குத் திறக்கும் நடவடிக்கை மூன்றாம் நாள் நிகழ்வாக முன்னெடுக்கப்பட்டு அதற்கான வங்கிப் புத்தகங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இன்று காலை இடம்பெற்ற இந்நிகழ்வில் தலைமைப்பீட சமூர்த்தி முகமையாளர், முகாமைத்துவ பணிப்பாளர், வங்கி முகாமையாளர், வலய மற்றும் வங்கி உதவி முகாமையாளர்கள், வங்கி மற்றும் பிரிவுகளில் கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூர்த்தி சமூக அமைப்புக்களின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கொத்தமல்லிப் போர்வையில் பீடி இலை இறக்குமதி உயர் அதிகாரியின் அழுத்தம் காரணமாக விடுவிப்பு?

## அரசுக்கு 8 கோடி வரி வருமான இழப்பாம்!

சுங்க மத்திய புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் குழுவொன்றினால் கைப்பற்றப்பட்ட கொத்தமல்லி எனும் போர்வையில் இலங்கைக்குச் சட்ட விரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 8 கோடியே 60 லட்சம் ரூபா பெறுமதியான பீடி இலைகள் உயர் அதிகாரியொருவரின் அழுத்தம் காரணமாக விடுவிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த பீடி இலைகள் கைப்பற்றப்பட்டமை தொடர்பில், சுங்க ஊடகப் பேச்சாளர் சீவலி அருக்கொட சில தினங்களுக்கு முன்னர் ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார். இந்த பீடி இலைகள் இந்தியாவின் தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து, இரண்டு இருபது அடி நீள கொள்கலன்களில் கடந்த 12 ஆம் திகதி கொழும்புத் துறைமுகத்திற்கு ஹோமாகம பகுதியில் வசிக்கும் இறக்குமதியாளர் ஒருவரால் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன.

இந்த இரண்டு கொள்கலன்களிலும் பெருமளவில் பீடி இலைகள் இருந்ததாகவும், சிலவேளை துறைமுகச் சுங்கத்திலிருந்து இதற்கு விலக்கு அளித்திருந்தால் அரசுக்கு ஏழு கோடியே எழுபது லட்சம் ரூபாய் வரி வருமான இழப்பு ஏற்பட்டிருக்கும் என்றும் சீவலி அருக்கொட முன்னதாக தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

எனினும், அத்தகைய நிலையிலும் நீதித்துறை உயர் அதிகாரியொருவரின் அழுத்தம் காரணமாக அவை விடுவிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சின் உள் வட்டாரங்கள் தற்போது தெரிவித்துள்ளன.

எனவே, இது குறித்த விசாரணைகளை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்க பதில் நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நடவடிக்கை எடுத்துள்ளதாக அறியவருகின்றது. (ரெ-07)

# நிமலராஜனின் நினைவேந்தல் நிகழ்வு





யாழ்ப்பாணத்தில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 23ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ். ஊடக அமையத்தில் இன்று அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். ஊடக அமையத்தின் தலைவர் கு.செல்வக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பொதுச்சுடரை ஊடக அமையத்தின் செயலாளர் சி. நிதர்ஷன் ஏற்றிவைக்க, நிமலராஜனின் உருவப் படத்துக்கு மலர்மாலையை ஊடகவியலாளர் ம.நியூட்டன் அணிவித்தார்.

அதனைத் தொடர்ந்து ஊடகவியலாளர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் ஆகியோர் மலரஞ்சலி செலுத்தினர்.

போர்ச் சூழலில் யாழ்ப்பாணத்தில் இருந்து துணிவாக ஊடகப் பணியாற்றியவர் மயில்வாகனம் நிமலராஜன். பி.பி.சியின் தமிழ் மற்றும் சிங்கள சேவை, வீரகேசரி, ராவய போன்ற ஊடகங்களில் பணியாற்றி இருந்தார்.

இந்நிலையில், கடந்த 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி யாழ். மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த வேளை அவரது வீட்டு வளவினுள் புகுந்த ஆயுததாரிகள், வீட்டின் யன்னல் ஊடாக அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். அதன்போது அவர் எழுதிக்கொண்டு இருந்த கட்டுரைத் தாள் மீது சரிந்தே சாவடைந்தார்.

கொலையாளிகள் நிமலராஜனைப் படுகொலை செய்த பின்னர், வீட்டின் மீது கைக்குண்டுத் தாக்குதலையும் மேற்கொண்டனர். அதன்போது வீட்டில் இருந்த நிமலராஜனின் தந்தை சங்கரப்பிள்ளை மயில்வாகனம், தாய் லில்லி மயில்வாகனம் மற்றும் மருமகன் ஜெகதாஸ் பிரசன்னா ஆகியோர் படுகாயமடைந்திருந்தனர் என்பது நினைவுகூரத்தக்கது. (அ)

# இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம் தொழில் கற்கைகளுக்கு விண்ணப்பம்

இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தில் முழு நேர மற்றும் பகுதிநேர தொழிற்கற்கை நெறிகளுக்கு மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர் .

பகுதிநேர கற்கைநெறிகளாக நீரியல் வளர்ப்பு மற்றும் நீரியல்வள முகாமைத்துவ தேசிய டிப்ளோமா (National Diploma in Aguaculture & Aquatic Resource Management – NVQ Level 5 ), கடலுணவு தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா (National Diploma in Sea Food Technology – NVQ level 5), கடலக ஏற்பாட்டியல் மற்றும் முகாமைத்துவ தேசிய டிப்ளோமா (National Diploma in Maritime & Logiostics Management – NVQ level 5 ) ஆகிய கற்கை நெறிகளும்,

முழுநேர மற்றும் பகுதிநேர கற்கை நெறிகளாக நீரியல் வளர்ப்பு தொழிநுட்பவியலாளர் (Aquculture Technician – NVQ level 4 ), வெளியிணைப்பு இயந்திர பொறிமுறையாளர் (Outboard motor mechanic NVQ Level 3), கடலக மாலுமி (Fishing Vessel Skipper – NVQ Level 3/4), தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியலாளர் (Information & Communication Technology Technician – NVQ Level 4 ), அலங்கார மீன் வளர்ப்பும் முகாமைத்துவமும் (Ornamental Fish Culture & Management ), நீச்சல் பயிற்சிநெறி (Swimming ), கடலக வரைபடம் வாசித்தலும் செய்மதித் தொடர்பாடலும் (Marine Chart Reading Communication & Operation Of Satellite Navigator ) ஆகிய பயிற்சி நெறிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

படகினை செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரத்தினை (Coxwains License ) பெற்றுக்கொள்ள விரும்புபவர்களுக்கு கடலக மாலுமிப் பயிற்சிநெறியானது பயனுள்ளதாக அமையும்.

க.பொ.த சாதாரணதரம் , உயர்தரப் பரீட்சைகளில் தோற்றியவர்கள் மற்றும் துறைசார் ஆர்வம் உடையவர்களும் இக்கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

இக்கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்தவர்கள் உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலும் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் தேசிய தொழிற்தகைமை சான்றிதழினை (NVQ Certificate) பெற்றுக்கொள்ளமுடியும்.

மேற்படி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தில் பெற்று வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது .(கு)

# பதிவாளர் நாயக திணைக்களத்தின் சுற்றுநிருபத்துக்கு கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் கடும் எதிர்ப்பு!

(ஹஸ்பர்)

பிறப்பு, இறப்பு சான்றிதழில் இனத்தினை குறிப்பிடுவது குறித்து பதிவாளர் நாயக திணைக்களம் வெளியிட்டுள்ள சுற்றுநிருபத்தை வன்மையாகக் கண்டிப்பதாக கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

பிறப்பு, இறப்புச் சான்றிதழ்களில் தமது இனத்தைக் குறிப்பிடுவது தொடர்பாக பதிவாளர் நாயகத் திணைக்களத்திற்கு சுற்றுரூபம் வெளியிட எவ்வித உரிமையும் இல்லை.

இலங்கையர் என்ற வகையில் தனது இனத்தை பிறப்பு இறப்புச் சான்றிதழ்களில் குறிப்பிட இந்நாட்டுப் பிரஜை என்ற வகையில் அனைவருக்கும் உரிமை உள்ளது.

பிரஜா உரிமை இல்லாத சமூகமாக நாம் இருந்த பொழுது, இந்திய வம்சாவளித் தமிழர்கள் என்ற அடையாளமே எமக்கான அங்கீகாரமாக இருந்தது. எம் இனத்தின் அடையாளத்தைத் தீர்மானிப்பதற்கு மூன்றாம் தரப்பினருக்கு எவ்வித உரிமையும் கிடையாது.

1948 ஆம் ஆண்டுகளில் பிரஜா உரிமை இன்றி இருந்த நம் சமூகம் கிட்டத்தட்ட 40 வருட போராட்டங்களுக்கு பிறகு இந்திய வம்சாவளியினர் என்ற அங்கீகாரத்துடன் பிரஜா உரிமை பெற்றது.

இந்திய வம்சாவளித் தமிழ் மக்களை, "இலங்கைத் தமிழர்" என அடையாளப்படுத்த முற்படுவது அம்மக்களின் அடையாளத்தை மறைக்கும் ஒரு செயல்பாடாகும். இவ்வாறான சுற்றுநிருபங்களை வெளியிடுவதை வன்மையாகக் கண்டிக்கிறேன், என்று அவர் கூறியுள்ளார்.

# மாங்குளம் புகையிரத நிலையத்தில் அனைத்து ரயில்களும் தரிக்க ஏற்பாடு




வரும் 12 ஆம் திகதி முதல் மாங்குளம் புகையிரத நிலையத்தில் அத்தடத்தில் பயணிக்கும் அனைத்து புகையிரதங்களும் நிறுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு மக்களினால் நீண்டகாலமாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக, பலதரப்பட்டவர்களின் முயற்சியினால் தற்போது இது சாத்தியமாகியுள்ளது.

ஆசன கருமபீடமும் விரைவில் அமைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக புகையிரத நிலைய அலுவலர்கள் தெரிவித்தனர்.

திணைக்களத்தால் வெளியிடப்பட்ட நேர அட்டவணைப்படி 5.10 க்கு கொழும்பு கோட்டையில் இருந்து புறப்படும் குளிரூட்டப்பட்ட கடுகதி ரயில் 10.42 க்கு மாங்குளத்தை வந்தடைந்து, காங்கேசன்துறை நோக்கிப் புறப்படும் (ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும்).

யாழ் நிலா இரவு 10 மணிக்குப் புறப்பட்டு மாங்குளத்திற்கு அதிகாலை 4.20 க்கு வந்தடைந்து, காங்கேசன்துறை நோக்கிப் புறப்படும் (வெள்ளிக்கிழமை மட்டும்).

காங்கேசன்துறையில் இருந்து பிற்பகல் 1.15 க்குப் புறப்படும் குளிரூட்டிய கடுகதிப் புகையிரதம் மாங்குளத்தை பிற்பகல் 2.54 ற்கு வந்தடைந்து, கொழும்பை நோக்கிச் செல்லும் (ஞாயிறு மட்டும்).

யாழ் நிலாபுகையிரதம் - காங்கேசன்துறையில் இருந்து இரவு 9.30 க்கு புறப்பட்டு மாங்குளத்திற்கு இரவு 11.20 க்கு வந்தடைந்து, கொழும்பு நோக்கிச் செல்லும் (ஞாயிறு மட்டும்).


JRIDE
BEYOND THE ROAD
ONLINE TAXI APP
FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக
உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN
EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
GET IT ON
Google Play
Download on the
App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

# 7 நாடுகளுக்கு பாசுமதி அல்லாத அரிசியை ஏற்றுமதி செய்ய இந்திய அரசாங்கம் ஒப்புதல்

ஏழு நாடுகளுக்கு 10.34 லட்சம் டன் பாசுமதி அல்லாத பிற அரிசியை ஏற்றுமதி செய்ய இந்திய மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இது தொடர்பாக இந்திய மத்திய வர்த்தக அமைச்சகத்தின் கீழ் செயல்படும் வெளிநாட்டு வர்த்தக தலைமை இயக்குநரகம் நேற்று புதன் கிழமை வெளியிட்ட அறிக்கையில், கடந்த ஜுலை 20 ஆம் திகதி பாசுமதி அல்லாத பிற அரிசியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய மத்திய அரசு தடை விதித்தது. உள்நாட்டில் அரிசி விநியோகத்தை உயர்த்த இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

எனினும் சில நாடுகளின் உணவுத் தேவையை பூர்த்தி செய்யவும், அவற்றின் கோரிக்கையை ஏற்கும் வகையிலும் ஏற்றுமதிக்கு அனுமதிக்கப் படுகிறது.

இந்நிலையில், நேபாளத்துக்கு 95,000 தொன், கமரூனுக்கு 1.90 லட்சம் தொன், கோட் டிவாருக்கு 1.42 லட்சம் தொன், கினிக்கு 1.42 லட்சம் தொன், மலேசியாவுக்கு 1.70 லட்சம் தொன், பிலிப்பின்ஸுக்கு 2.95 லட்சம் தொன் மற்றும் சீஷெல்ஸுக்கு 800 தொன் பாசுமதி அல்லாத பிற அரிசியை ஏற்றுமதி செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மொத்தம் 10.34 லட்சம் தொன் அரிசியை ஏற்றுமதி செய்ய ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது, என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.10.2023இல் வெளியிடப்பெற்றது.